# பெண்மொழி நோக்கில் வெள்ளிவீதியார் கவிதைகள்

**திருமதி. செல்வ அம்பிகை நந்தகுமரன்,**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ்த்துறை, கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
selvampikai@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்.**

அண்மைக் காலங்களில் பெண்ணியம் தொடர்பான கருத்துக்கள் ஆய்வுலகில் முக்கிய கவனத்தைப் பெற்றுள்ளன. பெண்ணிலைவாத ஆய்வில் பேசப்படும் விடயங் களில் ஒன்றாகப் 'பெண்மொழி' என்பது அமைகின்றது. பெண் தனது சிந்தனைகளை, உணர்வுகளை, அனுபவங்களை எவ்வித தணிக்கைகளும் இன்றி எடுத்துரைக்கத் தனக்கென ஒருமொழி தேவை எனக் கருதும்போது பெண்மொழி உருவாகின்றது. பெண்களுக்கான கட்டுப்பாடுகள் கடுமையாக விதிக்கப்பட்ட சூழலில் வாழ்ந்த சங்கப் பெண்பாற் புலவர்களின் படைப்புக்களினூடாகப் பெண்மொழி பற்றிய கருத்துக்களை வெளிக்கொணர்தல் இன்றைய சூழலமைவுக்குப் பொருத்தப்பாடுடையது ஆகும்.

சங்கப் பெண்பாற் புலவர்களுள் ஒருவராக வெள்ளிவீதியார் விளங்குகின்றார். வெள்ளிவீதியார் அகத்திணைப் பாடல்களை மட்டும் பாடியுள்ளார். வெள்ளிவீதியாரால் பாடப்பட்டதாகப் பதின்மூன்று பாடல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவரது பாடல்கள் உடல்சார்ந்த, உள்மனம் சார்ந்த பாடல்களாக அமைகின்றன. வெள்ளிவீதியார் தலை வனைப் பிரிந்திருந்தமை வரலாற்றுச் செய்தியாகப் பதிவாகியுள்ளது. வெள்ளிவீதியார் பாடல்களில் இடம்பெறும் தலைவியின் புலம்பல்கள் அவரது அனுபவப் பகிர்வுகளாகக் கருதப்படுகின்றன.

இந்த ஆய்வானது பெண்மொழி நோக்கில் வெள்ளிவீதியார் கவிதைகளை ஆய்வுசெய்ய முனைகின்றது. சங்ககாலத்தில் பெண்கள் தமது உணர்வுகளைப் புலப்படுத்தத் தனித்துவமான மொழி ஒன்றைக் கையாண்டுள்ளனரா? என்பது

வெள்ளிவீதியார் கவிதைகள் மூலம் ஆராயப்படுகின்றது. வெள்ளிவீதியார் கவிதைகளில் 'பெண் மொழி' பேசப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிதல் இந்த ஆய்வின் நோக்கமாகும். இந்த ஆய் வில் வெள்ளிவீதியார் கவிதைகள் முதன்மை மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன. பெண்மொழி குறித்த ஆய்வுகள், கட்டுரைகள், வெள்ளிவீதியார் பற்றிய ஆய்வுகள், கட்டுரைகள் போன்றன துணை மூலங்களாகக் கொள்ளப்படுகின்றன. வெள்ளிவீதியார் பாடல்களையும் பாடற் பொருண் மைகளையும் இனங்காணுதல் அவரின் மொழிக்கையாளுகையையும் அதன் தனித்துவத் தையும் கண்டறிதல் ஆகியன இவரது அகக்கவிதைகள் தொடர்பில் கவனிக்கப்பட வேண்டிய பிரச் சினைகள் ஆகும். வெள்ளிவீதியார் கவிதைகள் தொடர்பாக இதுவரை வெளிவந்த ஆய்வுகளை நோக்கும்போது அவரின் வரலாறு, பாடற்பொருண்மையின் சிறப்புக்கள் பற்றிய மரபான பதிவுகளாகவே அமைகின்றன. வெள்ளிவீதியார் அகப்பாடல்களில் பெண்மொழி குறித்துப் பெண் ணிய அணுகுமுறையின் வழியான விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே வெள்ளிவீதியார் கவிதைகளைப் பெண்மொழி நோக்கில் ஆய்வுசெய்ய வேண்டியதை இதுவரை வெளிவந்த ஆய்வுகள் உணர்த்து கின்றன. வெள்ளிவீதியார் தமது கவிதைகளில் பெண்மொழி ஒன்றைக் கட்டமைத்திருந்தார் என்பது ஆய்வின் கருதுகோளாக முன்வைக்கப்படுகின்றது. இந்த ஆய்வு விவரணமுறையியல் ஆய்வினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆய்வில் பகுப்பாய்வு அணுகுமுறை, ஒப்பீட்டு அணுகுமுறை, பெண் ணிலை ஆய்வு அணுகுமுறை ஆகியன பின்பற்றப்படும். 'பெண்மொழி' தொடர்பான கருத்துக்கள் முனைப்புப்பெற்றுவரும் தமிழ் இலக் கியச் சூழலில் முதல் தமிழ் இலக்கியப் படைப்பாளராகக் கருதப்படும் சங்ககாலப் பெண்கவிஞர் களில் ஒருவரான வெள்ளிவீதியார் கவிதைகளைப் பெண்ணிய அணுகுமுறையின் வழி ஆய்வுக் குட்படுத்த வேண்டிய தேவை உள்ளது. சமகாலத்தில் பேசப்படும் பெண்மொழி பற்றிய கருத்து நிலைகள் தோன்றுமுன்பே சங்கப் பெண்கவிஞர்கள் தமக்கென் ஒரு பெண்மொழியை உரு வாக்கிவிட்டனரா? என்பது ஆய்வின் மூலம் கண்டறியப்படும்.

**திறவுச்சொற்கள்:-** வெள்ளிவீதியார், பெண்மொழி, அகப்பாடல், பெண், அனுபவ உணர்வு.

**அறிமுகம்**

அண்மைக் காலங்களில் பெண்ணியம் தொடர்பான கருத்துக்கள் ஆய்வுலகில் முக்கிய கவனத்தைப் பெற்றுள்ளன. பெண்ணிலைவாத ஆய்வில் பேசப்படும் விடயங்களில் ஒன்றாகப் 'பெண் மொழி' என்பது அமைகிறது. பெண் தனது சிந்தனைகளை, உணர்வுகளை, அனுபவங் களை எவ்வித தணிக்கைகளும் இன்றி எடுத்துரைக்கத் தனக்கென ஒரு மொழி தேவை எனக் கருதும் போது பெண்மொழி உருவாகின்றது. பெண்களுக்கான கட்டுப்பாடுகள் கடுமையாக விதிக்கப்பட்ட சூழலில் வாழ்ந்த சங்கப் பெண்பாற் புலவர்களின் படைப்புக்களினூடாகப் பெண் மொழி பற்றிய கருத்துக்களை வெளிக்கொணர்தல் இன்றைய சூழலமைவுக்குப் பொருத்தப் பாடுடையது ஆகும்.

சங்கப்பாடல்கள் பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும். சங்ககால மக்க ளின் அகவாழ்வும் புறவாழ்வும் சங்கப்பாடல்களின் பொருள் மரபாக அமைந்தது. ஆண்பாற் புலவர்கள் பரவலாக அறியப்பட்ட சங்க இலக்கியப் பாடல்களின் எண்ணிக்கையில் குறைவான பெண்பாற் புலவர்களே படைப்பாக்க முயற்சியில் இனங்காணப்பட்டுள்ளனர். பெண்பாற் புலவர் களில் சிலரே பெண்ணின் உடல், உள உணர்வுக் கவிதைகளைப் படைத்துக் கற்பிதங்களைக் கட்டுடைக்க முயற்சித்துள்ளனர்.

சங்கப் பெண்பாற் புலவர்களுள் ஒருவராக வெள்ளிவீதியார் விளங்குகிறார். வெள்ளிவீதி யார் அகத்திணைப் பாடல்களை மட்டும் பாடியுள்ளார். வெள்ளிவீதியாரால் பாடப்பட்டதாகப் பதின்மூன்று பாடல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவரது பாடல்கள் உடல் சார்ந்த உள்மனம் சார்ந்த பாடல்களாக அமைகின்றன. வெள்ளிவீதியார் தலைவனைப் பிரிந்திருந்தமை வரலாற்றுச் செய்தியாகப் பதிவாகியுள்ளது. வெள்ளிவீதியார் பாடல்களில் இடம்பெறும் தலைவியின் புலம் பல்கள் அவரது அனுபவப் பகிர்வுகளாகக் கருதப்படுகின்றன.

இந்த ஆய்வானது பெண்மொழி நோக்கில் வெள்ளிவீதியார் கவிதைகளை ஆய்வுசெய்ய முனைகின்றது. சங்ககாலத்தில் பெண்கள் தமது உணர்வுகளைப் புலப்படுத்தத் தனித்துவமான மொழி ஒன்றைக் கையாண்டுள்ளனரா? என்பது வெள்ளிவீதியார் கவிதைகள் மூலம் ஆராயப் படுகின்றது.

**பெண்மொழி**

மொழி என்பது மனிதன் தன் சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்குரிய கருவியாகும். மொழிப்பயன்பாட்டில் ஆண், பெண் என்ற பால் பாகுபாட்டிற்கு இடமில்லை. எனினும் மொழியைக் கையாளும் அதிகாரம் யாரிடம் உள்ளதோ அவரது சிந்தனையை ஒட்டியே மொழியும் வேறுபடு கின்றது. தாய்வழிச் சமுதாய அமைப்பிலிருந்து தந்தைவழிச் சமுதாய அமைப்பு ஏற்பட்ட பின்பு பல துறைகளிலும் ஆண்களுக்குச் சார்பாகவே மொழி அமைந்தது. மனிதனின் சமூகக்கட்டமைப்பு, ஆளுமைத்திறன் இவற்றின் காரணமாக மொழி அமைப்பு பேச்சிலும் இலக்கியத்திலும் வேறுபடு கின்றது. பெண்ணின் மொழி அமைப்பு ஆணின் மொழி அமைப்பிலிருந்து வேறுபடுவதற்குச் சமூ கச் செயற்பாடுகள், உயிரியல் மாற்றங்கள், உளமாற்றங்கள் போன்றவையே காரணமாகின்றன.

இன்றைய காலத்தில் பெண்ணியம் என்னும் சிந்தனை எல்லோராலும் கவனிக்கப்பட்டும் பேசப்பட்டும் வருகின்ற விடயமாகக் கருதப்படுகின்றது. பெண்கள் ஒடுக்கப்பட்ட நிலைக்கான கார ணங்களைக் கண்டறிந்து அதிலிருந்து விடுதலைபெறப் பெண்ணியம் பல நிலைகளில் போராடி வருகின்றது. "இதுவரை சொல்லப்பட்ட கருத்துக்கள் ஆணாதிக்கத்தின் வெளிப்பாடான ஆண் மொழி என்றும் இதனை மறுத்துப் புறந்தள்ளிப் பெண்களுக்கான மொழியை உருவாக்கிவிட வேண்டும் என்றும் இன்றைய பெண்ணியம் விழைகின்றது." (ஞானசேகரன், தே., 2014, ப. 3)

பெண்மொழி என்பது பெண்களை மையமிட்ட எழுத்து என்றுதான் ஆரம்பகாலத்தில் உண ரப்பட்டது. மாதவையா, பாரதியார், புதுமைப்பித்தன் போன்ற பலர் பெண்களை மையப்படுத்திப் படைப்புக் களைப் படைத்துள்ளனர். பின்னர் பெண் படைப்பாளிகளின் எழுத்துக்கள் பெண்மொழி எனக் கருதப்பட்டது. பெண் படைப்பாளர்களில் பலரும் ஆணியச் சிந்தனைகளோடு படைப் புக்களை வெளிக் கொணர்கின்றனர்.

இன்று பெண்மொழி என்பது பெண் எழுதும் எழுத்து என்பதுடன், பெண் தன்னைப் பெண் ணாக உணர்ந்து தமக்கான பிரச்சினைகளைத் தமது சூழலில் எடுத்துரைப்பதாகவும் கருதப்படு கின்றது. பெண் தன் சிந்தனைகளை, உணர்வுகளை, அனுபவங்களை எவ்விதத் தணிக்கை களும் இன்றி எடுத்துரைக்கத் தனக்கென ஒரு மொழி தேவை எனக் கருதும்போது பெண்மொழி உருவாகின்றது.

"பெண் தன்னுடைய ஆழ்மன ஓட்டங்களை சின்னக் கனவுகளை நடைமுறை வாழ்க் கையை உள்ளது உள்ளபடி சொல்லிப்போகும் மொழியே 'பெண்மொழி'. அது அவளுடைய மன தின் மொழி என்றும் சொல்லப்படுகின்றது." (பத்மாவதி, எஸ்., 2001, பக். ஐ - viii). பெண் தன்

மீதான பல்வகை ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபடுவதற்குரிய வழிமுறைகளில் ஒன்றாக அவளுக்கே மட்டும் உரித்தான பெண்மொழியைக் கட்டமைத்துக்கொள்ள வேண்டும். ஆண்களின் அதிகாரத்தால் கட்டமைக்கப்பட்ட மொழியினால் பெண்கள் தமது உணர்வுகளை எடுத்துரைக்க முடியாது. பெண் தன் அனுபவங்களைத் தான் உணர்ந்தவாறே வெளிப்படுத்தப் பெண் மொழி தேவை.

**வெள்ளிவீதியார் அறிமுகம்**

சங்கப்பாடல்கள் பல்வேறு புலவர்களால் பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பாகும். சங்ககால மக்களின் அகவாழ்வும் புறவாழ்வும் பாடல்களின் பொருள்மரபாக அமைந்தது. ஆண்பாற் புலவர்கள் பரவலாக அறியப்பட்ட சங்கஇலக்கியப் பாடல்களில் எண்ணிக்கையில் குறைவான பெண் பாற் புலவர்களே படைப்பாக்க முயற்சியில் அறியப்படுகின்றனர். சங்கப்பாடல்களில் பெயரறியாப் புலவர்களின் பாடல்களும் இடம்பெற்றுள்ளன. பெயர் அறிய முடியாத புலவர்களுக்குச் சிறப்புப் பெயர்கள் வழங்கப்பட்டுள்ளன. அச்சிறப்புப் பெயர்கள் புலவர் பாடிய செய்யுட்களில் காணப்படும் தொடர்களாகக் காணப்படு கின்றன. இயற்கையால் பெயர் சூட்டப்பட்ட புலவர்கள் பலரும் ஆண்பாற புலவர்களாகவே அடையாளப் படுத்தப்படுகின்றனர். புலவர்களின் பாடற்பொருண்மையை நுண்ணாய்வுக்கு உட்படுத்துவதன் மூலம் இச்சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் நிலை உருவாகும். சங்கப் பெண்பாற் புலவர்களுள் ஒருவராக வெள்ளி வீதியார் விளங்குகிறார்.

ஔவையார் பாடிய பாடல் ஒன்றில் (அகம். 147) வெள்ளிவீதியார் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

"ஓங்கு மலைச் சிலம்பில் பிடவுடன் மலர்ந்த
வேங்கை வெறித்தழை வேறு வகுத்தன்ன
ஊன்பொதி அவிழாக் கோட்டு உகிர்க் குருளை
மூன்று உடல் ஈன்ற முடங்கர் நிகழ்த்த
துறுகல் விடர் அளைப் பிணவுப்பசி கூர்ந்தெனப்
பொறிகிளர் உழுவைப் போழ்வாய் ஏற்றை
அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்
நெறிபடு கவலை நிரம்பா நீளிடை
வெள்ளி வீதியைப் போல நன்றும்
செலவு அயர்ந்திசினால் யானே......."

(அகம். 147)

தலைவனைப் பிரிந்து தேடித்திரிந்த வெள்ளிவீதியைப் போல நானும் செலவு அயரட்டுமோ என்பது ஔவையார் பாடலின் கருத்து. வெள்ளிவீதியார் தலைவனைப் பிரிந்திருந்தமை வரலாற்றுச் செய்தியாகப் பதிவாகியுள்ளது. வெள்ளிவீதியார் பாடல்களில் இடம்பெறும் தலைவியின் புலம்பல்கள் அவரது சுய அனுபவப் பகிர்வுகளாக அவர் காலத்தில் பேசப்பட்டிருக்கலாம். வெள்ளிவீதியார் அகத் திணைப் பாடல்களை மட்டும் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். வெள்ளிவீதியாரால் பாடப்பட்டதாகப் பதின்மூன்று பாடல்கள் இனங்காணப்பட்டுள்ளன. பாலைத் திணை, குறிஞ்சித் திணை, நெய்தல்திணை, மருதத்திணை ஆகிய திணைகளுக்குரியனவாக அவை வகுக்கப்பட்டுள்ளன. வெள்ளிவீதியாரின் அகத்திணைப் பாடல்கள் பின்வருவன.

| | | |
|---|---|---|
| குறுந்தொகை | : | 27, 44, 58, 130, 146, 149, 169, 386 |
| நற்றிணை | : | 70, 335, 348 |
| அகநானூறு | : | 45, 362 |

இப்பாடல்கள் தலைவனைப் பிரிந்த தலைவியின் உணர்வுகளைப் புலப்படுத்துவன. இவை யாவும் பெண்பாற் கூற்றுக்களாகவே அமைகின்றன. வெள்ளிவீதியார் முல்லைத்திணை சார்ந்த பாடல்கள் எவற்றையும் பாடவில்லை. முல்லைத்திணைக்குரிய அக ஒழுக்கம் 'இருத்தல்' என்ப தாகும். வினைவயிற் பிரிந்துசென்ற தலைவன் திரும்பி வரும்வரை பிரிவை ஆற்றியிருத்தல் 'இருத்தல்' என்பதாகும். 'இருத்தல்' ஒழுக்கத்தை 'முல்லை சான்ற கற்பு' எனச் சங்கப்பாடல்கள் (நற். 142, சிறுபாண். 30) சிறப்பிக்கின்றன. "பெண்ணானவள் தன் காமத்தைப் பொறுத்துப் பிரிவை ஆற்றியிருக்க வேண்டும் என்ற மரபான ஆண்வழிச் சமுதாயச் சிந்தனைகளை மறுப்பவராகத் தம்மை அடையாளப்படுத்திய வெள்ளிவீதியார் முல்லைத்திணையைப் பாடுவதில் ஆர்வம் இல்லாதவராக இருந்திருக்கலாம்." (அம்மன்கிளி, மு., 2006, ப. 232). சராசரி குடும்பப் பெண் என்ற நிலையின் வரையறைகளை மீறிப் பெண்ணின் உணர்வுகளை இயல்பாக வெளிப் படுத்துவதாக வெள்ளிவீதியாரது பாடல்கள் அமைகின்றன.

### பெண்மொழி நோக்கில் வெள்ளிவீதியார் கவிதைகளை அணுகும்முறை.

பெண்மொழிக்கான ஆரம்பத்தினையும் அடித்தளத்தினையும் சங்கப் பெண்கவிஞர்களின் கவிதைகளில் கண்டுகொள்ளலாம். சமூகத்தின் ஆதிக்கத்தினால் உருவாக்கம் பெற்ற ஆண் மொழியின் அதிகாரத்தைக் கட்டுடைத்துப் பெண்மொழிக்கான இருப்பை நிலைநிறுத்தியவர் களாகச் சங்கப் பெண்கவிஞர்கள் விளங்குகின்றனர். சங்கப் பெண்கவிஞர்கள் அடித்தளமிட்ட பெண்மொழியை அவர்களின் தொடர்ச்சியாகச் சமகாலப் பெண்கவிஞர்கள் புதிய உத்வேகத்துடன் தமது கவிதைகளில் வெளிப்படுத்தி வருகின்றனர். இரா. காஞ்சனா என்பவர் பெண்மொழி அடிப் படையில் கவிதைகளை அணுகும் முறைகளைக் குறிப்பிட்டுள்ளார். (காஞ்சனா, இரா., 2018, ப. 5).

- எவ்விதமான தணிக்கைகளும் இன்றி உணர்வுகளை வெளிப்படுத்தல்.
- உடல் ரீதியான அனுபவ வெளிப்பாட்டில் தனக்கான தனிமொழிப் பயன்பாட்டினைச் சுட்டுதல்.
- உணர்வு வெளிப்பாட்டில் இடம்பெறும் பெண்மொழி.
- படைப்பாளிய் பொருள் தேர்வு.
- வெளிப்பாட்டில் சொற்சுருக்கமும் சுற்றி வளைத்துப் பேசுதலும்.
- உடன்பாட்டுக் கேள்விகளை அமைத்தல்.
- அதிகமான அடைமொழிகள், உவமைகள், குறியீடுகளைப் பயன்படுத்துதல்.
- மொழிப் பயன்பாட்டில் ஆண் கவிஞர்களிடமிருந்து வேறுபடுவதைச் சுட்டல்.
- இவற்றின் அடிப்படையில் வெள்ளிவீதியார் கதைகளில் பாடுபொருள், வெளிப்பாட்டு உத்திகள் என்ற வகைப்பாட்டில் பகுத்து நோக்கலாம்.

### வெள்ளிவீதியார் கவிதைகளில் பாடுபொருள்

சங்கப் பெண்பாற் கவிஞரான வெள்ளிவீதியாரது கவிதைகளில் பெண்மொழிக்கான கூறு களை இனங்காண முடிகின்றது. இவரது கவிதைகள் பெண்ணின் உடல் மற்றும் மனம் சார்ந்த உணர்வுக ளைச் சுய அனுபவங்களோடு பேசுவனவாக அமைகின்றன. அந்த வகையில் இவரது கவிதைகளைப் பெண் தன் உடலைப்பாடுதல், உடலின் உணர்வைப் பாடுதல், உடல்சார்ந்த கூற்றுக்கள், தன் அனுபவ உணர்வு வெளிப்பாடு என வகைப்படுத்தி நோக்கலாம்.

### பெண் தன் உடலைப்பாடுதல்

பெண் தன் உடலைப்பாடுதல் என்னும் பெண்மொழிக்கான கூறினை வெள்ளிவீதியாரது

பின்வரும் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

"கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்ஆன் தீம்பால் நிலத்து உக்கா அங்கு
எனக்கும் ஆகாது என்னைக்கும் உதவாது
பசலை உணீஇயர் வேண்டும்
திதலை அல்குல் என்மாமைக் கவினே" (குறுந். 27)

"கோடை நீடிய அகன்பெருங் குன்றத்து
நீர்இல் ஆர்அற்று நிவப்பன களிறு அட்டு
ஆள்இல் அத்தத்து உழுவை உகளும்
காடு இறந்தனரே காதலர் மாமை
அரிநுண் பசலை பாஅய் பீரத்து
எழில் மலர் புரைதல் வேண்டும்" (அகம். 45)

தன் இளமை நலம் பயன்படாது வீணே கழிவது குறித்து வருந்தும் பெண்மொழிக் கூறினை மேற்குறித்த பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இப்பாடலடிகளில் இளமை நலம் மிக்க, மாமைக்க வின்மிக்க, அழகிய பீர்க்கம்பூப் போன்ற பசலை மிகுந்த பெண்ணின் உடல் அழகை வெள்ளி வீதியார் பாடியுள்ளார். பெண்களின் மேனிநிறம் அவர்களின் அக உணர்வு நிலைக்கேற்ப மாறு தல் அடையும். சங்க அகப்பாடல்களில் இடம்பெறும் பசலை, மாமை, சுணங்கு என்னும் சொற்கள் பெண்ணின் மேனி நிறவேறுபாடுகளைக் குறிப்பன. 'பசலை' தலைவியின் அழகைக் கெடுக்கும் என்றும், 'மாமமையும் சுணங்கும்' தலைவிக்கு அழகை ஏற்படுத்தும் என்பதும் சங்க அகப்பாடல் வரிகளால் அறிய முடிகின்றது. பெண்ணுக்கு இருக்கக்கூடிய அவளது உடலழகைப் போற்றி அந்த அழகு தலைவனுக்குப் பயன்படாது வீணே கழிவதற்காக இரங்கும் பெண்மொழிக் கூற்றாக இவரது கவிதை வரிகள் அமைகின்றன.

**பெண் தன் உடலின் உணர்வைப் பாடுதல்**

வெள்ளிவீதியார் ஆண்வழிச் சமூக அமைப்பு நிலவிய காலத்தில் வாழ்ந்து பெண்ணின் உணர்வுகளைப் பேசியவர். காதல் மிகுந்த நிலையில் 'காமம் மிக்க கழிபடர் கிளவி'களாக இவரது பெரும்பான்மையான கவிதைகள் அமைகின்றன. உள்ளப் போராட்டத்தை உடற் போராட்ட மாகக் காட்டுவனவாக அமைந்துள்ளன.

பெண் தன்னுடைய உடல் உணர்வுகளை எவ்விதத் தணிக்கைகளும் இன்றி எடுத் துரைக்க வேண்டும் என்று பெண்ணியவாதிகள் கூறுகின்றனர். வெள்ளிவீதியாருடைய பாடல் கள் இக்கருத்துக்கு அரணாக அமைகின்றன. அகத்திணை மரபை முன்னிறுத்திப் பேசும் சங் கக்கவிதைகளில் பெண்கள் தமது காதல் மற்றும் காமத்தை வெளிப்படையாகக் கூறக்கூடாது என் பது மரபாகும். இம்மரபினைப் பெரும்பான்மையாக ஆண் படைப்பாளர்கள் பின்பற்றி இருக்கும் நிலையில் பெண் படைப்பாளர்கள் இம்மரபை மீறியுள்ளனர். வெள்ளிவீதியார் பெண்ணின் உடல் உணர்வினைப் பேசும் பாடல்களையே அதிகம் பாடியுள்ளார். குறுந்தொகைப் பாடல் ஒன்றில்,

"ஞாயிறு காயும் வெவ் அறை மருங்கில்
கை இல் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கு அரிதே"
(குறுந். 58)

என உடலின் உணர்வினைப் பாடுகின்றார். சூடான பாறையிடத்தில் வெண்ணெய் காப்பார் இன்றி உருகிப் பரவுதல் போல எனக்குள் பரவிய காமநோயைப் பொறுத்துக்கொண்டு நீக்குதல் அரிது என்பது இக்கவிதையின் பொருள். காயும் சூரியன், கொதிக்கும் பாறை, உருகும் வெண் ணெய், கையிழந்த ஊமன் ஆகிய அனைத்துச் சொற்களும் இணைந்து சிறந்த உருக்காட்சியை உருவாக்குகின்றன. காமநோய் பரந்த உடலுக்கு உவமையாகின்றது.

நற்றிணைப் பாடல் ஒன்றில் (நற்றி. 335) துணையைப் பிரிந்திருக்கும் அன்றில் பறவை தலை வியின் அருகில் வந்து எலும்பு உருகக் கத்துகின்றது. யாழின் ஓசையும் இரவுவரை இசைக்கப் படுகின்றது. இவை யாவற்றாலும் தலைவியின் காமம் பெரிதாகின்றது. ஆனால் காமநோயைக் களையும் தலைவர் அருகில் இல்லை. இதனைத் தலைவி கூற்றாக "காமம் பெரிதே களைஞரோ இலரே" என வெள்ளிவீதியார் பாடுகின்றார். "இயற்கையின் இதம் மிகுந்த சூழலில் காமம் மிக்க மன நிலையில் தனது அன்பிற்கினிய தலைவனை எண்ணித்தவிக்கும் பெண்ணின் தவிப்பு தணிக்கை யின்றிச் சொற்களாக விரிவடைகின்றன. இத்தகைய பெண்ணின் மனநிலை தாய்வழிச் சமூகத்தின் எச்சமாக இருப்பதற்கான வாய்ப்புண்டு." (முருகேசபாண்டியன், ந., 2014, ப. xii)

**உடல் சார்ந்த அடையாளப் பதிவுகள்**

சங்க அகப்பாடல்களில் பெண்பாற் கவிஞர்கள் பெண்களின் உடல் சார்ந்த அடையாளங் களைப் பாடல்களில் பதிவுசெய்துள்ளனர். பெண்ணின் உடல் சார்ந்த அடையாளப் பதிவுகளுக்கு அடிப்படை யாகத் திதலை, தித்தி, பசலை, மாமை, சுணங்கு, அல்குல், முலை, காமம், கருவைச் சுமந்த வயிறு, வயாஅ (கருவுற்ற மகளிர் புளிப்புச்சுவை மீது கொள்ளும் அதீத நாட்டம்), சூல், பூப்பு, இடை போன்றன தனிச்சிறப்பு மிக்க சொல்லாட்சிகள் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆண் பாற் புலவர்களும் இச்சொற்களைத் தமது பாடல்களில் பயன்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. எனினும் பெண் கவிஞர்களின் சொற்பயன்பாட்டில் இச்சொற்கள் பற்றிய விவரிப்புக்கள் உணர்வு பூர்வமாக மனத் தடையற்ற நிலையில் பதிவாகியுள்ளன. "ஆணின் காமம் ஓரிடத்தில் மட்டும் குவிந்திருக்கும் நிலையில் பெண்ணின் காமம் உடல்முழுக்கப் பரவிக்கிடக்கிறது." (முருகேச பாண்டியன், ந., 2014, பக். XII - XIII). பெண்ணின் காம உணர்வுக்குத் தோற்றுவாயான இட மாக 'முலைகள்' பெண் கவிஞர்களால் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஔவையாரின் அகநானூற்றுப் பாடலில்

"முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுலை
அசைவுடை நெஞ்சத்து உயவுத் திரள்நீடி
ஊரோர் எடுத்த அம்பல் அம்சினை
ஆராக்காதல் அவிர்தளிர் பரப்பி" (அகம். 273)

என முலையிடை முளைவிட்டு கிளைவிட்டுத் தளிர்பரப்பிய நோய் என்று பெண்ணின் உடல்சார்ந்த காமத்தைச் சிறப்பிக்கின்றார்.

வெள்ளிவீதியார் பாடல்களிலும் உடல்சார்ந்த அடையாளப் பதிவுகள் சிறப்பான அடை மொழிக ளோடு பயன்படுத்தப்பட்டுள்ளன. 'இடைமுலைச் சுணங்கணி' (அகம். 362), 'பசலை உணீ இயர் வேண்டும் திதலை அல்குல் என் மாமைக் கவினே' (குறுந். 27), 'மாமை அருநுண் பசலை பாஅய்ப் பீரத்து' (அகம். 456), 'வெண்ணெய் உணங்கல் போலப் பரந்தன்று இந்நோய்' (குறுந். 58), 'காமம் நெரிதரக் கைநில்லாதே' (குறுந். 149), 'காமம் பெரிதே களைஞரோ இலரே' (நற். 355) போன்ற சொல்லாட்சிகளைக் காணமுடிகின்றது.

சங்கப் பெண்கவிஞர்களின் கவிதைகளில் பெண் உடல் பற்றிய கூற்றுக்கள் வெளிப்படையாகப் பேசப்பட்டுள்ளதைக் கவிதைகளின் வழிக் கண்டுணர முடிகின்றது. ஆண்வழிச் சமூகத்தின் அதிகாரம் நிலவிய காலத்தில் வாழ்ந்த சங்கப் பெண்கவிஞர்கள் தமிழ்ச் சமூகம் மர்மப்படுத்தி யுள்ள பெண் உடலையும் பெண்ணுக்கே மட்டும் விலக்காகக் கருதி ஒதுக்கப்பட்ட கற்பிதங்களை யும் தணிக்கை யின்றிப் பாடல்களில் கட்டுடைக்கின்றனர். பெண்ணுக்கே உரித்தான இச் சொற் கள் அதிக அழுத்தத் தோடு இவர்களின் கவிதைகளில் பேசப்படுவதைக் காணலாம். சங்க இலக் கியத்தில் பெண்ணின் மாதவிலக்குப் பற்றிக் குறிப்பிடும் பெண் கவிஞராகப் பொன்முடியார் அமை கின்றார். முருகன் கோயிலுக்கு வந்தபோது மாதவிலக்குக் காரணமாக அங்குள்ள கலங்களைத் தொடாமல் ஒதுங்கி நின்ற பெண் பற்றிய காட்சிகளை உவமையாகப் பொன்முடியார் பாடியுள்ளார். (புறம். 299). மாதவிலக்குற்ற பெண்ணைக் 'காலந் தொடா மகளிர்' எனச் சிறப்பித்துள்ளார்.

## தன் அனுபவ உணர்வு வெளிப்பாடு

பெண் படைப்பாளர்களின் படைப்புக்கள் மூலம் அவர்களின் சொந்த வாழ்க்கை அனுபவங் களை அறியமுடிகின்றது என்றும், இதன்மூலம் பெண்படைப்பாளர்கள் சந்தித்த சமூக நிலைப்பாட் டையும் படைப்புக்கள் எழுதிய சூழலையும் அறியமுடியும் என்றும் பெண்ணியவாதிகள் கருத்துக் கூறியுள்ளனர். ஆனால் இக்கருத்து எல்லாச் சங்கப் பெண்கவிஞர்களுக்கும் பொருந்தாது. ஏனெ னில் சங்கப் பெண்கவிஞர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையவர்களுக்கு வாழ்க்கை வரலாறு, வாழ்வின் அனுபவங்கள் பற்றிய போதிய தகவல்கள் இல்லை. வெள்ளிவீதியாரின் தன் அனுபவ உணர்வு வெளிப்பாடு என்பதை நோக்கும்போது சங்க இலக்கியம் கட்டமைக்கும் அகமரபையும் மீறி அவரது சொந்த வாழ்வின் அனுபவங்கள் பாடல்களில் வெளிப்படுகின்றன.

"காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
ஆதிமந்தி போல பேதுற்று
அலந்தனென் உழல்வென கொல்லோ" (அகம். 45)

எனப் பாடுகின்றார். பெண்கூற்றாக அமையும் வெள்ளிவீதியாரின் பாடல்களில் எல்லாம் அவரது சுய அனுபவப் பகிர்வுகளைக் கேட்கமுடிகின்றது. வெள்ளிவீதியாரது கவிதைகள் அவரது சுய அனுபவ வெளிப்பாடுகளே என்பதை உ. வே. சாமிநாதையர் (குறுந்தொகை உரை), பின்னத் தூர் நாராயண சாமிஐயர் (நற்றிணை உரை), நச்சினார்க்கினியர் (தொல்காப்பியப் பொருளதிகார உரை) போன்றோரது உரைகளின் வாயிலாகவும் அறியமுடிகின்றது.

பெண்ணின் உணர்வுகளை இயல்பாக வெளிப்படுத்தும் இவரது கவிதைகளில் அமைந் துள்ள தன்மை ஒருமை வடிவம் (யான், நான்) தன்மைப் பன்மை வடிவம் (நம், யாம், எம்) ஆகி யன பெண் மொழியின் அனுபவ வெளிப்பாடுகள் ஆகும். ஔவையின் "நெறிபடு கவலை நிரம்பா நீளிடை வெள்ளி வீதியைப் போல நன்றும் செலவயர்ந்திசினால் யானே" (அகம். 147) என்ற பாடல் வெள்ளிவீதியாரின் சுய அனுபவ நிலையைக் கோடிட்டுக் காட்டுகின்றது. காதலனை இழந்து பேதுற்றுத் தனிமைத் துயரினால் தவிப்புற்ற வெள்ளிவீதியாரின் உணர்வுகளை ஔவையின் பாடல் மூலம் அறியமுடி கின்றது. ஆண்களை முன்னிலைப்படுத்திய சங்கச் சமூகத்தில் தணிக் கைகளை மீறிச் சுய அனுபவ உணர்வுகளை மிகத்துணிவாக இவரது கவிதைகள் வெளிப்படுத்தி யுள்ளன.

## பெண்மொழிப் பயன்பாடும் புலமைச் சிறப்பும்.

சங்ககால ஆண்பாற் புலவர்களினதும், பெண்பாற் புலவர்களினதும் பாடல்களை எடுத்து

நோக்குமிடத்து பாடல்களின் மொழியமைப்பில் பெரிதளவிலான வேறுபாடுகளை இனங் காண முடியவில்லை. எனினும் இக்கருத்து மேலும் ஆய்வுக்குரிய ஒன்றாகக் காணப்படுகின்றது. மொழிப் பயன்பாட்டினைப் பொறுத்தவரையில் ஆண்பாற் புலவர்களுக்கும் பெண்பாற் புலவர் களுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்நிலையில் பெண்பாற் புலவர்களின் மொழிப்பயன்பாட்டின் கூறுகளையும் தனித்துவங்களையும் கண்டறிவது அவசியமாகும்.

வெள்ளிவீதியாரின் பாடல்களை எடுத்து நோக்குமிடத்துப் பின்வரும் கூறுகள் பெண் மொழிப் பயன்பாட்டில் அமையப்பெற்றுள்ளதனைக் காணலாம்.

விளித்தொடர்களை அமைத்தல்.
அடிக்கடிக் கேள்விகளைக் கேட்டல்.
உணர்விடைச் சொற்கள் அதிகம் பயின்று வருதல்.
சிறப்பான உவமைக் கையாட்சி.
ஒரே வகையான சொற்கள்ஃ தொடர்களின் பயன்பாடு.
எதிர்மறையான சொல்லாட்சிகள்.

வெள்ளிவீதியாரின் நற்றிணை 70 ஆம் பாடலின் மூலம் இவரின் பெண்மொழியின் பயன் பாட்டினையும் புலமைச் சிறப்பினையும் எடுத்துநோக்கலாம்.

"சிறு வெள்ளாங் குருகே சிறு வெள்ளாங் குருகே
துறை போக அறுவைத் தூமடி அன்ன
நிறம்பிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே
எம்ஊர் வந்து எம் உண்துறைத் துழைஇ
சினைக்கெளிற்று ஆர்கையை அவர் ஊர்ப் பெயர்தி
ஆங்கண் தீம்புனல் ஈங்கண் பரக்கும்
கழனி நல்ஊர் மகிழ்நர்க்கு என்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே?" (நற்றி. 70)

வெள்ளாங்குருகை விளித்துப் பாடும் இப்பாடலின் உவமைச்சிறப்பு குறிப்பிடத்தக்கது. வெள் ளாங்குருகின் இளமைத் தன்மையும் தூமடி அன்ன வெள்ளிய நிறங்கிளர் தூவி அக்குருகின் கபடு இல்லாத வெள்ளை உள்ளத்தின் தன்மையையும் சுட்டி அதன் மூலம் காதல் வயப்பட்ட அனுபவம் இல்லாத நீ என் துன்பத்தை உள்ளபடி உணர்வாயோ? உணர்ந்ததை என் தலைவனிடம் சென்று கூறுவாயா? கூறுவதற்கு அத்தனை அன்பு உடையையோ நீ? அல்லது மறந்து விடுவாயா? எனப் பல கேள்விகளை அடுக்கி உவமைகளுடன் கூடிய நீண்ட விளித்தொடராக அமைகின்றார்.

இப்பாடலில் பெண்மொழியின் ஒரு கூறாக விளித்தொடர்களை அடுக்கிக்கூறல், வினாக் களைக் கேட்டல் போன்றன அமைவதை இனங்காண முடிகின்றது. இப்பாடலில் விளித்தொடர் களை மீண்டும் மீண்டும் அமைப்பதுடன் முதல் இரண்டு விளிச்சொற்களில் இருந்தும் மூன்றாவது விளிச்சொல்லை மாற்ற மிக நீண்ட உவமையைப் பயன்படுத்துகின்றார். மேலும் வெள்ளிவீதியார் அனைய அன்பினையோ? பெரும் மறவியையோ? எனக் கேள்விகளையும் அடுக்கிச் செல்லு கின்றார். இவ்வாறு விளிச்சொற்களை அமைப்பதும் கேள்விகளை அடிக்கடி கேட்பதும் ஏனைய சங்கப் பெண் கவிஞர் களின் கவிதைகளிலும் காணமுடிகின்றது. இவை பொதுவாகச் சங்க இலக்கியங்களில் காணப்படும் மாதிரி வடிவங்களாக அமைகின்றன. பெண் கவிஞர்கள் தமது கவிதைகளில் சொற்களுக்கு அழுத்தம் கொடுத்தல், அதிகமான சொற்களைப் புகுத்தி எழுதுதல், அடைமொழிகளையும் வினாக்களையும் விளிச்சொற்களையும் அதிகமாக கையாள்வது போன்

றன தமது கருத்துக்களைப் படிப்பவர் உள்ளத் தில் பதியவைக்க முயலும் முயற்சியே ஆகும்.

வெள்ளிவீதியார் பாடல்களில் எதிர்மறையான சொல்லாட்சிகள் பயின்று வந்துள்ளமையை யும் அவதானிக்க முடிகின்றது. வெள்ளிவீதியாரின் 'சிறுவெள்ளாங்குருகே' எனத் தொடங்கும் நற்றிணை 70 ஆம் பாடலில் எதிர்மறையான சொல்லாட்சிகள் அமையப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| எம்மூர்வந்து | X | அவரூர்ப் பெயர்தி |
| அன்பினையோ | X | மறவியையோ |
| ஆங்கண் | X | ஈங்கண் |
| மகிழ்நன் | X | பருவரல் |

இவ்வாறான எதிர்மறையான சொல்லாட்சிகள் பெண்மொழியின் ஓர் உத்தியாகவே கருதப்படுகின்றது.

சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களைப் பொறுத்தவரையில் உணர்விடைச் சொற்கள் அதிகம் பயின்று வந்துள்ளன. சங்கப் பெண்பாற்புலவர் பாடல்களில் உணர்விடைச் சொற்கள் வெறுமனே பாடலைக் கட்டமைப்பதற்காக மட்டுமல்லாமல் பெண்ணின் உணர்வின் உச்சத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. ஆண்பாற் புலவர்களின் பாடல்களோடு ஒப்பிடும்போது பெண்பாற் புலவர்களின் பாடல்கள் இலக்கியநயம் மிக்கவையாகவும் உணர்வின் ஆழத்தை வெளிப்படுத்துபவையாகவும் அமைகின்றன. தலைவன் ஒருவனைத்தேடி அலைகின்ற தலைவி ஒருத்தி.

"காலே பரிதப் பினவே கண்ணே
நோக்கி நோக்கி வாள்இழந் தனவே
அகல் இரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற இவ் உலகத்துப் பிறரே" (குறுந். 44)

எனத் தன் வருத்தத்தைத் துயரம் ததும்பும் நிலையுடன் தலைவி எடுத்துரைத்துள்ளதை வெள்ளிவீதியார் பாடியுள்ளார். இங்கே ஏகார இடைச்சொற்கள் அதிகம் பயின்று வந்து உணர்வின் ஆழத்தைப் புலப்படுத்தி நிற்கின்றன.

சங்கப் பெண்பாற்புலவர்களில் ஒரே வகையான வாக்கிய அமைப்புக்களையும் பாடற் பொருண் மைகளையும் கண்டுகொள்ள முடிகின்றது. ஒரேவகையான வாக்கிய அமைப்புக்களின் பயன்பாடு பெண்பாற்புலவர்களை ஆண்பாற்புலவர்களின் பாடல்களில் நின்றும் வேறுபடுத்திக் காட்டுகிறது. பெண்பாற்புலவர்கள் படைத்திருக்கும் தலைவியர் பிரிவாற்றாமையால் வருந்தும் மனநிலையையும் தமது உடலின் காம உணர்வின் மிகுதியையும் பெரிதும் வெளிப்படுத்தியுள்ள னர். தலைவனின் வருகைக்காகக் காத்திருக்கும் தலைவி, தலைவனைக் காணவேண்டும் என்று துடிப்பதை வெள்ளி வீதியாரும் ஒக்கூர்மாசாத்தியாரும் தமது பாடல்வரிகளால் புலப்படுத் தியுள்ளனர். முறையே,

"குன்றின் தோன்றும் குவவு மணல்ஏறிக்
கண்டனம் வருகம் சென்மோ தோழி" (நற்றி. 235)

"முல்லை ஊர்ந்த கல்உயர்பு ஏறிக்
கண்டனம் வருகம் சென்மோ தோழி" (குறுந். 275)

எனப் பாடியிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக வேறு பெண்பாற் புலவர்களின் பாடல்களுக்கு இடையிலும் வாக்கிய அமைப்பிலும் பாடற்பொருண்மையிலும் ஒரேவகையான

தன்மையினைக் கண்டுகொள்ள முடிகின்றது.

### ஆண்பாற் புலவர் - பெண்பாற் புலவர் பாத்திரக் கூற்றுப் பாடல்கள்

சங்க அகப்பாடல்களை நோக்கும்போது தலைவன் கூற்றுக்கள் அதிகம் ஆண்பாற் புலவர் களாலும் தலைவி கூற்றுப் பாடல்கள் அதிகம் பெண்பாற் புலவர்களாலும் பாடப்பட்டுள்ளமையைக் காணலாம். பெண்பாற் புலவர்கள் பெண்ணின் மன உணர்வுகளைப் பாடுவதில் அதிகம் அக் கறை செலுத்தியுள்ளனர். அவர்களின் பாடல்களில் பெண்மையின் நிலை இயல்பாக எடுத்துரைக் கப் படுகின்றன. "அகத்திணை மாந்தர்களில் ஆணாட்களும் உண்டு. பெண் ஆட்களும் உண்டு. புலவர் எம்மாந்தரையும் பாடலாம். தலைவன், தோழன் போன்ற ஆண் மாந்தர்களை ஆண்பாற் புலவர்கள் பாடும்போது ஆணுள்ளம் நன்கு வெளிப்படும் எனவும் தலைவி, தோழி, செவிலி முத லான பெண் கூற்றுக்களைப் பெண்பாற் புலவர்கள் பாடும்போது பெண்மனம் இயல்பாக வரும் எனவும் பொதுவாகக் கொள்வதில் தவறில்லை" (மாணிக்கம், வ. சுப., 2000, ப. 28) என்னும் கருத்து இங்கே கவனிக்கத்தக்கது.

பெண்பாற் புலவர்களின் தலைவிகூற்றுப் பாடல்கள் பெண்ணின் உடல், மனம் சார்ந்த உணர்வுகளை எடுத்தியம்பும் வகையில் அமைகின்றன. பெண்ணின் உணர்வுகளை வெளிப் படுத்துவதில் ஆண்பாற்புலவர்களுக்கும் பெண்பாற் புலவர்களுக்கும் உணர்வுத்தளத்தில் வேறு பாடுகளைக் காணமுடிகின்றது. வெள்ளிவீதியார் தலைவியாக நின்று பாடிய ஒரு பாடலையும் பாலை பாடிய பெருங்கடுங்கோ தலைவி பற்றிப் பாடிய ஒரு பாடலையும் இங்கு ஒப்பிட்டு நோக்க முடியும்.

"அளிதோ தானே நாணே நம்மொடு
நனிநீ டுழந்தன்று மன்னே யினியே
வான்பூங் கரும்பி னோங்கு மணற் சிறுசிறை
தீம்புன னெரிதர வீய்ந்துக் காஅங்குத்
தாங்கு மளவைத் தாங்கி
காம நெறிதரக் கைந் நில் லாதே" (குறுந். 149)

இப்பாடல் நாணத்தை விடமுடியாமல் காமத்தையும் கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கும் தலைவியின் உணர்வினை எடுத்துரைப்பதாக அமைகின்றது. நாணம் தலைவியை விட்டுப் பிரியாமல் பலகாலம் வருத்துகின்றது. கரும்பின் உயர்ந்த சிறுகரையில் அருவிப்புனல் விரைந்து பாய்வதால் அக்கரை அழிவது போல காமம் மிகுந்து தாக்குவதால் என்னிடம் இல்லாது அழிந்து விடும் என்று தலைவி தன்னுடைய கையறுநிலையைத் தோழிக்கு எடுத்துரைக்கின்றாள்.

"ஓர் ஊர் வாழினும் சேரிவாரார்
சேரி வரினும் ஆரமுயங்கார்
ஏதிலாளர் சுடலை போலக்
காணாக் கழிய மன்னே - நாண் அட்டு
நல்லறிவு இகழ்ந்த காமம்
வில்லுமிழ் கணையிற் சென்று சேண்படவே" (குறுந். 231)

இப்பாடல் நாணத்தை அழித்து அறிவை இழக்கச்செய்த தலைவி ஒருத்தியின் காம உணர் வினைக் கூறுகின்றது. ஒரே ஊரில் ஒரே தெருவில் இருந்தாலும் தன்னைத் தழுவாது செல்லும் தலைவனின் செய்கையினால் தலைவியின் காமமானது நாணத்தையும் நல்லறிவையும் இழக்கச் செய்கின்றது. வில்லிலிருந்து புறப்பட்டுச் செல்லும் அம்புபோல காமம் தன்னைவிட்டு

நீண்டதூரம் சென்று அழிவடைய வேண்டும் எனத் தலைவி கூறுகின்றாள்.

இரண்டு பாடலும் தலைவியின் காமத்தைப் பற்றிப் பேசுகின்றன. தலைவியின் தாங்கமுடி யாத காமத்தை வெள்ளிவீதியார் அருவிப் புனல் பாய்வதால் அழியும் மணற்கரைக்கு உவமிக் கின்றார். பாலை பாடிய பெருங்கடுக்கோ 'நாண் அட்டு நல்லறிவிழந்த காமம்' என்கிறார். காமம் தன்னைவிட்டுச் செல்லவேண்டும் என்பதற்கு 'வில்லுமிழ்கணை' உவமையாகின்றது. வெள்ளி வீதியார் இயற்கையில் நாளாந்தம் காணுகின்ற காட்சி ஒன்றின் மூலம் தன் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றார். ஆனால் பெருங்கடுங்கோ கையதளுகின்ற உவமை வில்லுமிழ்கணை போர்சார்ந்த அனுபவத்துடன் சொல்லக் கூடியதாகும். பெண்ணின் உண்மையான மன வெளிப்பாடுகளும் இயல்பான வாழ்வியல் அம்சங்க ளுமே பெண்பாற் புலவர்களின் பாடல்களிலே காணக்கூடியதாக உள்ளது. ஆண் பாற் புலவர்களின் பெண்பாத்திரக் கூற்றுக்கள் அக்கால ஆண் சமூகத்தின் அதிகாரத்தன்மையையே காட்டுகின்றன. இவ்வகையில் பெண் நிலையில் நின்று பெண்மொழியை உருவாக்கிக் காட்டிய சிறப்பு பெண்பாற் புலவர்களுக்கே உரியதாகின்றது. ஆண்பாற் புலவர்களின் பாடல்களில் பெண்ணின் உணர்வுகளைவிடப் பெரும்பான்மையாக உலகியல் வாழ்க்கையில் பேணப்படவேண்டிய அறங் களே பேசப்பட்டுள்ளன.

**தொகுப்புரை**

சங்கப் பெண்பாற் புலவர்களுள் ஒருவரான வெள்ளிவீதியார் கவிதைகள் பெண்மொழி நோக்கில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. இவரது கவிதைகள் பாடுபொருள், புலமைச்சிறப்பு, பெண் மொழிப் பயன்பாடு, ஆண் புலவருடனான ஒப்பீடு என வகைப்படுத்தப்பட்டு ஆய்வுசெய்யப்பட் டுள்ளது. இந்த ஆய்வின் மூலம் சில முடிவகளைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது. அவை,

- சங்கப் புறப்பாடல்களைவிட அகப்பாடல்களே பெண்ணின் அகமன வெளிப்பாடாக அமைந் துள்ளன.
- பெண்களுக்குரிய சுயங்களையும் தேவைகளையும் தமது பாடல்களில் பதிவுசெய் திருந்தமை.
- பால்நிலைசார் விடயங்களைத் தம் பாடல்களிலே முக்கியமாகப் புலப்படுத்தியுள்ளமை.
- பாடல்களில் கையாளப்பட்டிருக்கும் மொழி, உணர்வு கலந்த மொழியாக அமைந்தமை.
- பெண்பாற்புலவர் பயன்படுத்தியிருக்கும் சொற்களும் வாக்கிய அமைப்புக்களும் தனித்துவ மானவை.
- மொழிப்பயன்பாட்டில் ஆண்பாற்புலவர் பாடல்களோடு ஒப்பிடுகையில் பெண்பாற் புலவரின் பாடல்களின் மொழி தனித்துவமானது.
- பெண்பாற் புலவரின் பாடல்களிலேயே உண்மையான பெண்மொழி பேசப்பட்டுள்ளது.

மரபுரீதியில் காதலையும் கற்பையும் முன்னிறுத்திச் சொல்லப்பட்ட பெண் பற்றிய கருத்துக்கள் கட்டமைக்கப்பட்டிருந்த சங்கச் சமுதாயத்தில் மாற்றுக் கருத்துக்களும் சமூக விமர் சனங்களும் பெண்ணின் கவிதை மொழிக்குள் பொதிந்திருப்பதை வெள்ளிவீதியார் கவிதைகள் புலப்படுத்தியுள்ளன. இன்று பால் அடையாளத்துடன் அறியப்படும் பெண் கவிதை மொழியின் தனித்துவத்தினையும் மூலத்தினையும் சங்கப் பெண் கவிஞர்களின் கவிதைகளிலிருந்து கண்டறிய முடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்**


* அம்மன்கிளி, மு., (2006), சங்கக் கவிதையாக்கம் - மரபும் மாற்றமும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை.
* காஞ்சனா, இரா., (2018), பெண்மொழி நோக்கில், மீனாட்சி புத்தக நிலையம், சென்னை.
* ஞானசேகரன், தே., (2014), பெண்வழக்காறுகள்: பெண்ணியக் கோட்பாட்டுப் பார்வை, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
* பஞ்சாங்கம், க., (2008), நவீன இலக்கியக் கோட்பாடுகள், காவ்யா வெளியீடு, சென்னை.
* பத்துப்பாட்டு, (1931), மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், உ. வே. சாமிநாதையர் பதிப்பு, சென்னை.
* பத்மாவதி, எஸ்., (2001), பெண்மொழி, ஞானபாநு, சென்னை.
* மனோன்மணி, ச., (2011), செவ்வியல் தமிழ் இலக்கியத்தின் பெண்மொழி, சர்வதேச எழுத்தாளர் மாநாடு சிறப்புமலர், சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், இலங்கை.
* மாணிக்கம், சுப., (2000), தமிழ்க் காதல், கழகப் பதிப்பு, திருநெல்வேலி.
* முத்துச்சிதம்பரம், (1999), பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.
* முருகேசபாண்டியன், ந., (2014), அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவில், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
* ஜெயா, வ., (2003), சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.